# ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் ஆலய வரலாறு

புராணங்களின் கூற்றுப்படி, பார்வதிதேவியால் உருவாக்கப்பட்ட உடன் இருந்த பிள்ளையாரின் தோற்றம் வேறு இப்போது உள்ள அவரின் தோற்றம் வேறு.

பார்வதியார் மண்ணினால் பிள்ளையாரை உருவாக்கி அதற்கு உயிர் கொடுத்து தனது அமைவிடத்திற்கு காவலாக வாசலில் நிற்குமாறு பணித்தார். யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்ற அறிவுறுத்தலுடன். அவரோ அங்கு வருகைதந்த சிவபெருமானைக்கூட உள்ளே போக அனுமதிக்காததால் அவரது தலை வெட்டி அழிக்கப்பட்டது. பின்னர் பார்வதியாரின் வேண்டுகோளுக்கு இணங்க முதலில் தென்பட்ட உயிரினமாகிய யானையின் தலையை எடுத்து மண்ணால் உருவாக்கப்பட்ட மீதி அமைப்பின் மீது வைக்கப்பட்டு தற்போதைய பிள்ளையார் தோன்றினார் என்பதே கதை.

முதலில் இருந்த மனித உருத்தலை சாதாரண தெய்வீக சக்தியையே குறிக்கும். இப்போது இருப்பது யானைத்தலை. மிகுந்த பலம், போகும் பாதையில் உள்ள தடைகளை அகற்றுவதற்கு அதிலுள்ள தும்பிக்கை, மிகச் சிறிய பொருளையும் தேடி அறியும் அந்த பலமான தும்பிக்கையிலுள்ள நுண்ணிய விரலமைப்பு யாவற்றையும் பிரதிபலிப்பது.

மேலும் உலக நன்மைக்காக தனது ஒரு தந்தத்தை ஒடித்து அதனைக் கையில் கொண்ட அர்ப்பணிப்பான தோற்றமாகவும் பிள்ளையார் தற்போதைய வடிவைக் கொண்டுள்ளார். அதுவே அவரது நிரந்தர வடிவு.

ஹரோ நகரம் பதியில் அமைந்து அருள்பாலிக்கும் எமது ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வரலாறுக்கும் இரு பகுதிகள் உண்டு.

முதன்முதலில் இவ்வாலயம் பிள்ளையார் அருள் பெற்ற ஐந்து அடியார்களாகிய திரு. ப. தனபாலசிங்கம், திரு. ம. மோகனதாஸ், திரு. கு. கெங்காதரன், திரு. வ. ஸ்ரீரஞ்சிதன், திரு. ச. அருணன் ஆகியோர்களின் கடும் முயற்சியால் 2001 ஆம் ஆண்டில், வாடகைக்கு எடுக்கப்பட்ட, North Harrow வில் அமைந்துள்ள St. Johns Ambulance மண்டபத்தில், விநாயகர், முருகன், அம்பாள் திருவுருப் படங்கள் வைக்கப்பட்டு உதயம் ஆகியது. வாரத்தில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மாலைநேர வழிபாடும் இடம்பெற்றிருந்தது.

சில மாதங்களில் ஐம்பொன்னாலான விநாயகர், அம்பாள் திருவுருவ விக்கிரகங்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நிறைவேறி பொலிவு பெற்றது. ஆயினும் பிள்ளையாரின் திருவிளையாடல் சில சிக்கல்களைத் தோற்றுவிக்கவே, ஆலயம் Harrow Weald இல் அமைந்திருக்கும் சக்தி மண்டபமான பிறிதொரு வாடகைக் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு முன்போலவே செவ்வாய், வெள்ளி வழிபாடுகள் நடைபெற்று வந்தன.

ஆலயம் படிப்படியாக வளர்ச்சி கண்டு வரும் வேளையில், ஆலயத்திற்கொரு நிரந்தர மண்டபம் வேண்டுமென்ற எண்ணத்தை விநாயகர் தன் பக்தர்களின் உள்ளங்களில் வித்திட்டார். எண்ணம் செயலாக மாறியது. ஆலய அறங்காவலர்களும், நிர்வாகத்தினரும், ஏனைய அடியார்களும் முயற்சி எடுத்தார்கள். அயராது உழைத்தார்கள். அறங்காவலர்கள் முன்மாதிரி காட்ட ஏனைய அடியவர்களும் மனமுவந்து அன்பளிப்புச் செய்தனர். அதற்கும் மேல் வங்கியில் கடன் பெறும் வாய்ப்பும் கைகூடியது. அதன் மூலம் நமக்குக் கிடைத்ததே இன்று இப்பிள்ளையார் கோவிலிருக்குமிடம்.

இன்றைய இந்த நிலையை அடைய பழைய பொருட்கிடங்காக இருந்த இவ்விடம் பல மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டது. அவற்றை பிறர் கையால் செய்விப்பதற்கு விநாயகர் அனுமதிக்கவுமில்லை. அதற்கான பணம் எமக்குக் கிடைக்கவுமில்லை. ஆகவே அறங்காவலர்களும், தொண்டர்களும், தொண்டடிப்படையில் தாமாகவே முன்வந்து பணியாற்றினர். கட்டிடத் திருத்த வேலைகள்

ஆரம்பிக்கப்பட்டது 2004 கார்த்திகை (November 2004) மாதம் கடுங்குளிரான பருவம். ஒவ்வொருவரும் ஆளுக்கு மூன்று காலுறைகள் அணிந்தே கட்டிட வேலைக்கு தொண்டாற்றினர். அறங்காவலர்கள், நிர்வாகத்தினர் இன்னும் பல அடியார்களும் அரும் பணியாற்றினர்.

கட்டிட வேலைகள் நிறைவுற்று 2005 இல் தைப்பொங்கல் தினத்தன்று இங்கு நிலைக்கொண்டு நிரந்தர வடிவு பெற்றது இந்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம். முதலில் உருவாக்கப்பட்ட பிள்ளயார் அவரின் நிஜ வடிவு பெற்றது போல அமைந்தது.

நாம் வாங்கும் போது பொருட்கிடங்காக இருந்த இவ்விடம், இன்றோ அருட் கோவில். மின்னொளி வசதியோ, வெப்பப்படுத்தும் வசதியோ இல்லாமல், வாடகைக்கு விடப்பட்ட எட்டு அறைகளை விட்டால் மிகுதி பாவனையற்றுப் பயனின்றி இருந்த இடம் இன்று அருள் ஒளி பரப்பும் ஞானமுதல்வன் ஆலயம்.

இங்கு திங்கள் முதல் வெள்ளி வரை மாலைநேர வழிபாடும், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மதியவேளை வழிபாடும், 2008 ஆம் ஆண்டு முதல் பதினொரு நாள் அலங்காரத் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. ஆயினும் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் முடிந்திருந்தபோதும் விநாயகருக்கு மூலஸ்தானம் இல்லாதது பெருங்குறையாக இருந்தது. தற்போது அவனருளால் அது களையப்பட்டு விநாயகர் மூலஸ்தானமும் பரிவாரமூர்த்திகள் சந்நிதிகளும் அமையப் பெற்றுவிட்டன. ஐந்தடி உயர விநாயகர் திருவிக்கிரகமும், சிவன்-பார்வதி, முருகன்-வள்ளி-தெய்வானை விக்கிரக மூர்த்திகளும் அவினாசியில் இருந்து தருவிக்கப்பட்டிருக்கின்றன.

சிவன் விக்கிரகம் காசியில் கங்கா நதியில் வளர்ந்து வந்த கல் அவினாசிக்கு எடுத்து வரப்பட்டு, செதுக்கி பீடத்துடன் அமையப் பெற்றது என்பது விசேடமாகும். ஆலயத்தின் உட்புறம் விசாலமாக்கப்பட்டு அடியார்கள் வசதியாக வழிபடும் பொருட்டு அழகாகப் புனரமைக்கப்பட்டுமுள்ளது.

குருவருளும், திருவருளும் துணை நிற்க, வளர்பிறை சதுர்த்தசி திதி, உத்தரட்டாதி நட்சத்திரம், சித்தயோகம், விருச்சிக லக்கினம் கூடிய நன்னாளான விகிர்த்தி வருஷம் திணாயனம் சரத்ருது, ஐப்பசி மாதம் 4 ஆம் நாள் (21-10-2010) அன்று விநாயகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகட்கும் மஹா கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்திப் பெருவிழா நடைபெற்றது. 22.10.2010 வெள்ளிக்கிழமை முதற்கொண்டு 08.12.2010 புதன்கிழமை வரை 48 நாட்கள் மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெற்றன.

லண்டனில் உள்ள ஆலயங்களுள் எமது சித்தி விநாயகர் ஆலயத்திற்கென சில சிறப்புகள் உண்டு. எமது ஆலயத்தில் விநாயகருக்கும் பரிவார மூர்த்திகட்கும் மாலை கட்டுதல், மடப்பள்ளிச் சமையல், ஆலயம் பெருக்குதல், நெய்விளக்கேற்றல் போன்ற சகல வேலைகளும் தொண்டரடிப்படையில் தொண்டர்களால் செய்யப்பட்டு வருகின்றது.

22.10.2010 வெள்ளிக்கிழமை முதற்கொண்டு தினமும் நான்கு நேரப் பூஜை காலை 9.00 மணி, நண்பகல் 12.00 மணி, மாலை 5.00 மணி, இரவு 8.00 மணி நேரங்களில் நடைபெற்று வருகின்றது. ஆலயம் தினமும் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரையும், பின்னர் பிற்பகல் 5.00 மணி முதல் இரவு 9.30 மணிவரையும் திறந்திருக்கும். ஆங்கில புதுவருட தினத்தன்றும், தமிழ் புதுவருட தினத்தன்றும், ஆவணிச் சதுர்த்தி தினத்தன்றும், புரட்டாசிச் சனிக்கிழமைகளிலும் காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கும்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஆவணி மாதம் தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வரை ஆலயத்தில் ஆலயத்தில் 11 நாட்களுக்கு அலங்காரத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வவுனியாவில் அமைந்துள்ள மேகநாதன் சிற்பாலயத்தில் ஸ்தபதி திரு. மேகநாதனின் மேற்பார்வையில் அவருடைய மகன் ஸ்தபதி திரு மேகநாதன் தனவேந்தன் எமது ஆலயத்திற்கு ஏற்றவாறு அலங்காரத் தேர் செய்வித்து நேரத்துடன் அனுப்பி வைத்தார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 12 ஆம் திகதி எமது ஆலயத்தில் முதன் முறையாக கொடியேற்ற வைபவம் நடைபெற்று 25-08-2019 ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கடந்த 28-08-2019 புதன்கிழமை வைரவர்மடையுடன் வருடாந்த மகோற்சவம் இனிதே முடிவடைந்தது.

எமது ஆலயம் சைவத் திருக்கோவில் ஒன்றியத்திலும் அங்கத்துவம் பெற்று சில பணிகளை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இலண்டனில் உள்ள பல ஆலயங்களைப் போன்று எமது ஆலயமும் நம் நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வகையிலும் உதவி புரிந்து வருகிறது. அத்துடன் கடந்த 2013 சித்திரை மாதம் தொடக்கம் போரினால் பெற்றோரை இழந்த 24 மாணவர்களையும், 6 மாணவிகளையும் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி விடுதியில் தங்க வைத்து அவர்களுடைய கல்விக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து வருகிறது. விடுதியில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வியில் மட்டுமென்றில்லாமல் கலை, விளையாட்டு துறைகளிலும் முன்னேறக் கூடிய வகையில் உதவியும் ஊக்கமும் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியத்தின் மூலம் தென்னங்கன்று வழங்குதல், அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு நிதி உதவியளித்தல், வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி செய்தல் போன்றவற்றைச் செய்து வருகின்றோம்.

இது தவிர, யாழ். தர்மபுரத்தில் 41 மூதாளர்களுக்கு நமச்சிவாய இல்லத்தில் தங்குமிடம் அமைப்பதற்கு ஒரு கட்டடம் தேவைப்பட்டது. ஆக கட்டடத்தை அமைப்பதற்கு எமது அலயம் £10,000 அனுப்பியது, இதன் விளைவாக இன்று 41 மூதாளர்கள் அனைவரும் அம்மண்டபத்தில் நிம்மதியாக வாழ்கின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் உலகம் முழுவதையும் ஏற்படுத்தியதன் விளைவாக. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உணவுகள் இல்லாமல் தவிப்போருக்கு உலர் உணவு அவசரமாகத் தேவவைப்பட்டது. கொரோனா வைரஸ் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக கடந்த 05-04-2020 அன்று அறங்காவலர்கள் மற்றும் பக்தர்களின் கூட்டு முயற்சிகள் மூலம் £2000 பவுண்கள் திரட்டி தாயகத்திற்கு அனுப்பப்பட்டது. £2000 பவுண்களுக்கும் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு, கொரோனா வைரஸ் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட 500 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 09-04-2020 அன்று உணவுப்பொருட்கள் விநியோகிக்கப்பட்டது. அத்துடன் திருச்சியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழர் புனர்வாழ்வு மையத்திற்கு £1000 ஆனுப்பி, உலர்உணவு வழங்கப்பட்டது.

எங்கள் அடுத்த திட்டம் £5000 செலவில் மட்டக்களப்பு, வன்னி போன்ற பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் தவிக்கும் மக்களுக்கு 10 கிணறுகளாவது கட்டுவதற்கு நிதி உதவி செய்ய வேண்டும். இந்த திட்டத்திற்கு பங்களிக்க விரும்புவோர், உங்கள் நன்கொடைகளை ஏற்பாடு செய்ய எமது ஆலயத்தை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

அன்பே சிவம் ஒரு மந்திரம் நாங்கள் எங்கள் தொண்டு உதவியாளர் மூலம் அயராது உழைக்கிறோம். விநாயகர் தனது ஆசீர்வாதங்கள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் எங்கள் தொண்டு முயற்சிகளைத் தொடர உதவுமாறு பிரார்த்திக்கிறோம்

**இறைபணியில்,**
**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹறோ)**